*Sri Lanka Library Review, Volume 35, Issue 1, January 2021*

# தொகுதி தலைப்புக்களை கொண்டமைந்த தமிழ் நூல்களும் அவற்றுக்கான சீரமைவுத் தலைப்புக்களும்: ஒரு விளக்க நிலை ஆய்வு

கலாநிதி. (திருமதி) மைதிலி விசாகரூபன்[1]

**ஆய்வுச் சுருக்கம்**

நூலகப் பட்டியலாக்கம் தொடர்பில் நூலொன்றை எழுதிய ஆசிரியரின் பெயர் சரியாக அறியப்படாத நிலையில் பட்டியல் பதிவின் தலையங்கமாக நூலின் தலைப்பினைத் தெரிவுசெய்து நூலகப்பட்டியல் தயாரிக்கும் முறை உள்ளது. இந்த அடிப்படையில் பட்டியலாக்கம் செய்ய எடுத்துக்கொள்ளப்பட்ட ஒரு நூல் பல்வேறு தலைப்புக்களைக் கொண்டிருக்குமாயின் அவற்றுள் குறிப்பிட்ட அந்த நூல் எந்தத் தலைப்பினால் வாசகரிடையே பிரபல்யமானதாகக் காணப்படுகின்றதோ அந்தத் தலைப்பினைப் பட்டியல் பதிவின் தலையங்கமாகத் தெரிவுசெய்து நூலகப்பட்டியல் தயாரிக்கப்படுகின்றது. இவ்வாறு தெரிவு செய்யப்படும் தலைப்பினைச் சீரமைவுத் தலைப்பு (ருெகைழசஅ வவைடந) எனப் பட்டியலாக்க விதிமுறை குறிப்பிடுகின்றது. ஆரம்பகால நூல்கள் பலவும் தலைப்பினால் முதன்மை பெறும் தொகைநிலைத் தன்மையுடையனவாக உள்ளன. நூலகங்களிலே இவற்றை நுட்பமான முறையில் ஒழுங்கமைப்பதற்குச் சரியான சீரமைவுத் தலைப்புக்கள் தெரிவு செய்யப்பட வேண்டியுள்ளன. இத் தெரிவை மேற்கொள்ளும் போது பிரதானமாக பகுப்பாக்கம் சார்ந்து வேறு வேறான பாடத்துறைகள் ஒரு சீரமைவுத் தலைப்பின் கீழ் ஒழுங்கமைக்கப்படும் சூழ்நிலை ஏற்படுகின்றது. தொகுதி தலைப்புக்களிலும் சிறு சிறு மாற்றங்களை செய்து கருத்துள்ள ஒழுங்கமைப்பை உருவாக்க வேண்டியுள்ளது. தொகுப்புத் தன்மையுடன் காணப்படும் வெளியீடுகளின் சீரமைவுத் தலைப்புத் தொடர்பில் ஏற்படும் இத்தகைய இடர்பாடுகளை இனங்கண்டு விளக்கியுரைப்பதும், பொருத்தமான சீரமைவுத் தலைப்புக்களை தெரிவுசெய்து கலந்துரையாடுவதும் இவ்வாய்வின் நோக்கமாகும். இவ் ஆய்வுக்காக ஐந்து தொகைநிலைத் தன்மையுடைய தொகைநூல்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. விளக்கவியல் ஆய்வுமுறை, வரலாற்று ஆய்வுமுறை, ஒப்பியல் ஆய்வுமுறை என்பவற்றினூடாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. தொகைநூல்களை ஒழுங்கமைத்தல் தொடர்பில் ஆராய்ச்சி நூலகங்களில் நடைமுறைப்படுத்த வேண்டிய நுட்பங்கள் இவ் ஆய்வு முடிவில் பரிந்துரை செய்யப்படுகின்றன.

**திறவுச் சொற்கள்:** நூலகவியல், நூலகப் பட்டியலாக்கம், சீரமைவுத் தலைப்பு

---

[1] *சிரேஷ்ட உதவி நூலகர், நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

*ழுசஉஐனு ஐனு 0000-0001-5878-8011* mvisakaruban@yahoo.com

# Anthologies in Classical Tamil Literature and Uniform Titles: A descriptive study


## Abstract

In library cataloguing, when the author's name of a book is not readily available, selecting the title of the book as the heading of that record, i.e the main entry of that catalogue, has been the normal practice according to cataloguing rules. But when a particular book has various descriptions, the catalogue entry for that book is determined by how it is popularly known among the readers. The title selected in this manner is known in cataloguing practice as the uniform title.The great classical creations in Tamil tradition such as Edduthokai, Pathu Paaddu, Pathinen Keal Kanakku, Panniru Thirumuraikal, Naalayira Thivya Pirapanthangal,... which are treasured compositions of the earlier era, which have all gained their prominence through each of their well-known titles that express the popularity of the anthologies of either a whole set or its related works. In libraries, these anthologies get prominence when they are given the most acceptable uniform title that would guide library users. When cataloguing such classical literature, we face situations where finding a uniform title is hard, since it is not easy to identify either something in common or differences among the ets/parts/volumes in inter-related collections.Today, it is essential that by doing an in depth study of these materials of earlier era that are in volumes /series under certain phrases, we give proper uniform titles to these anthologies and they arebrought to light by the aid of cataloguing in such a way that each branch of these sets of books could be explicitly identified by the users, bringing life to these materials by making it easily identified by the user.In this work, the materials selected for this study, were analysed, giving the differences among related materials in the set, the possible uniform titles were chosen, and how the final decision was taken considering limitations and appropriateness. The aim of the study, is to identify the problems faced in arriving at an appropriate uniform title, to such old materials that have immense value even to the younger generation of researchers and explaining the difficulties faced in finding the appropriate uniform titles.This study was undertaken using methods of historical analysis and comparative analysis. The techniques adopted are recommended in organizing and cataloguing such anthologies in research oriented libraries.


**Keywords:** Librarianship, Library Catalogue, Uniform Titles

## 1. அறிமுகம்

இலக்கிய உருவாக்கம் தொடர்பில் ஆரம்பகால நிகழ்வுகளை நோக்கும் போது பல பாடல்களை ஒன்றாகத் தொகுத்து ஒரு தொகைநூலாக ஆக்கும் தன்மை காணப்பட்டிருக்கின்றது. உலகின் மூத்த மொழிகளுளொன்றாகிய கிரேக்க மொழியிலமைந்த அந்தோலஜி (யுவொழடழபல) என்று குறிப்பிடப்படும் தொகை நூல்கள் இத்தகைய தன்மையிலமைந்ததென்பர். (வையாபுரிப்பிள்ளை 1954) இவ்வாறே வடமொழியிலமைந்த இலக்கியத்திலும் கூட பெயரறியப்படாத பல புலவர்களின் ஆக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. வடமொழியிலுள்ள கவீந்திரவசனசமுச்சயம் என்னும் நூல் இதற்கு உதாரணமாக எடுத்துக்காட்டப்படத்தக்கது. சமுச்சயம் என்பது தொகை என்று பொருள்படும். (நடராசன், 1967)

தமிழ் இலக்கியப் பரப்பிலும் கூட ஆரம்ப காலத்தில் தோன்றிய அரிய பல நூல்கள் தொகை நூல்களாகவே உள்ளன. சங்கச் செய்யுள்களைத் தொகுத்த புலவர்களின் பெயர்களும் தொகுப்பு வேலையைச் செய்வித்த பல மன்னர்களின் பெயர்களும் அறியக் கிடைக்கின்றன. (சிவத்தம்பி, 1988) பல தனித்தனி புலவர்களின் ஆக்கங்களை ஒரு பொதுவான தலைப்பின் கீழ் ஒன்றாக இணைத்துக் குறிப்பிடும் இலக்கியத் தொகுப்புக்களில் காணப்படக்கூடிய இன்னொரு தன்மை யாதெனின் அந்தந்தத் தொகுப்பில் இடம்பெறுகின்ற நூல்களின் எண்ணிக்கையினை தொகுதித் தலைப்புடனேயே சேர்த்துக் குறிப்பிடுகின்ற ஒரு முறையுமாகும். எட்டுத்தொகை நூல்கள் எட்டு பத்துப்பாட்டு நூல்கள் பத்து பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு திருமுறைத் தொகுப்புக்கள் பன்னிரண்டு திவ்வியபிரபந்தங்கள் நாலாயிரம் என்றவாறாக இவை அமைந்து காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் கூடப் பல்வேறு தனித்தனி தலைப்புக்களையும் கொண்டமைந்துள்ளன.

## 2. ஆய்வின் எல்லை

தமிழ் இலக்கியப் பரப்பில் பல தொகை நூல்கள் காணப்படுகின்றன. சுயம்பிரகாசயோகியார் என்பவர் தேவாரம் மற்றும் திருவாய்மொழி என்பவற்றிலிருந்து பாடல்களைப் பெற்றுச் சங்கரநாராயணத்திரட்டு என்னும்

நூலைத் தொகுத்துள்ளார். சுமார் 137 நூல்களிலிருந்து பெறப்பட்ட தத்துவக் கருத்துக்களைக் கொண்டதாக ‘சிவப்பிரகாசப் பெருந்திரட்டு’ என்னும் நூல் காணப்படுகின்றது. அகத்தியரின் பன்னிரண்டு மாணவர்கள் இயற்றிய நூற்தொகுப்பாக பன்னிருபாட்டியல் உள்ளது. (வையாபுரிப்பிள்ளை, 1954) சொற்பொழிவாற்றுவோரின் தேவைக்காகப் பல்வேறு இலக்கிய முக்கியத்துவமுடைய சிறப்புப் பகுதிகளை ஒருங்கு சேர்த்துள்ள ஒரு தொகுப்பு நூலாகப் ‘புறத்திரட்டு’ அமைந்துள்ளது. இது பிரசங்கம் செய்பவர்களுக்கு பயன்படக்கூடியது என்பதால் ‘பிரசங்காபரணம்’ எனவும் அழைக்கப்படுகின்றது. (சிவத்தம்பி, 2007) தமிழில் குறிப்பிடக்கூடிய இன்னொரு தொகுப்பு நூல் திருவள்ளுவமாலை. திருக்குறள் பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ள கருத்துக்களை ஒன்றாகப் பேணும் நோக்கில் திருவள்ளுவமாலை தொகுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ் இலக்கியப் பரப்பில் பல்வேறு தொகை நூல்கள் காணப்பட்டாலும் பின்வரும் ஐந்து தொகுப்பு நூல்கள் இவ் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

i. சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு மற்றும் எட்டுத்தொகையென்ற பதினெட்டு நூல்கள்.
ii. சங்கமருவியகாலத்திற்குரியன எனக் குறிப்பிடப்படுகின்ற பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்.
iii. பல்லவர் காலத்தின் தெய்வீக இலக்கியங்களாகப் போற்றித் தொகுக்கப்பட்ட பன்னிரு திருமுறைகள்.
iv. பல்லவர் காலத்திற்குரிய வைணவப்பாசுரங்களான நாலாயிரதிவ்வியப் பிரபந்தங்கள்.
v. நாயக்கர் காலத்தில் எழுந்தனவாகக் குறிப்பிடப்படுகின் சைவசித்தாந்த நூல்கள்.

தமிழில் பலதொகுப்பு நூல்கள் உள்ளபோதிலும் பயன்பாட்டு நோக்கில் இன்றும் இவை அதிக முக்கியத்துவம் பெறுவன என்ற அடிப்படையில் இந்நூற் தொகுதிகள் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## 3. ஆய்வின் நோக்கம்.

I. தொகை நூல்களை வாசகர்கள் இலகுவாகப் பயன்படுத்திக் கொள்ளத் தக்க வகையில் நூல் தட்டுக்களில் ஒழுங்கமைக்கக் கூடிய நுட்பங்களை இனங்கண்டு விளக்கியுரைத்தல்.

II. இத் தொகை நூல்களை ஏற்கனவே வழங்கி வரும் அதே மரபுத் தலைப்புக்களின் கீழ் ஒழுங்கமைக்கும் போது பகுப்பாக்கம் சார்ந்து விடய ஒழுங்கமைப்பில் ஏற்படக்கூடிய சவால்களைப் பற்றிக் கலந்துரையாடுதல்.

## 4. ஆய்வு மூலங்கள்

தமிழ் மரபிலெழுந்ததொகை நூல்களின் நூலக ஒழுங்கமைப்புத் தொடர்பான இவ்
ஆய்வின் முதனிலைத் தரவுச் சாதனங்களாகப் பின்வரும் நூல்கள் அமைந்துள்ளன.

i. ஆங்கில அமெரிக்க பட்டியலாக்க விதிமுறையின் இரண்டாவது பதிப்பு.

ii. தூயி தசம பகுப்பாக்கத்தின் இருபத்து மூன்றாவது பதிப்பு.

iii. பதினெண் மேற்கணக்கு நூல்கள்.

iv. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்.

v. பன்னிரு திருமுறைத் தொகுப்புக்கள்.

vi. நாலாயிர திவ்வியபிரபந்தத் தொகுப்புக்கள்.

vii. சைவசித்தாந்த நூல்கள்.

இத்தகைய முதனிலைத் தரவுச் சாதனங்களுடன் இந்நூல்களுடன் தொடர்பான ஆய்வு நூல்கள், பருவ இதழ் கட்டுரைகள் ஆகியனவும் இரண்டாம் நிலைத் தரவுச் சாதனங்களாகப் பயன்படுகின்றன.

## 5. ஆய்வுமுறையியல்

தொகுப்பு நூல்களாக உள்ள இந்த இலக்கிய நூல்களின் தன்மை, அவற்றின் அமைப்பு முதலான அம்சங்கள் விளக்கவியல் ஆய்வுமுறையினூடாக இவ் ஆய்வில் அணுகப்பட்டுள்ளன. இலக்கியங்கள்

தோன்றியகாலம், சூழல், இவை பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் முதலியன வரலாற்றாய்வு அணுகுமுறையூடாக அணுகப்பட்டுள்ளன. நூல்களை ஒப்பிடுதல்இ அவற்றின் தன்மையை வேறுபடுத்தல் முதலியன ஒப்பீட்டு ஆய்வுமுறையியலினூடாக இடம்பெறுகின்றது.

## 6. கருதுகோள்

இவ் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட தொகை நூல்கள் அந்தந்த தொகுப்பின் கீழுள்ள நூல்களைக் குறிப்பதற்குப் பொதுவானதொரு தலைப்பைக் கொண்டுள்ளன. அந்த நூல்களிலுள்ள பாடல்கள் அவை தோன்றிய காலத்திலேயே தொகுக்கப்படவில்லை (வையாபுரிப்பிள்ளை 1954). இதனால் ஆக்கத்தை உருவாக்கிய நபர்களின் பெயர்கள் அறியப்பட முடியாதுள்ளன. இதனால் தலைப்பினால் மாத்திரமே பெரிதும் அழைக்கப்படுகின்றன. ஒரு தலைப்பினாலன்றி பல தலைப்புக்களையும் கொண்டுள்ள நூல்களும் உள்ளன. எடுத்துக்காட்டாக திருமுறைகளைத் தமிழ் மறைஇ தமிழ் வேதம்இ பன்னிருதிருமுறை என்றவாறு குறிப்பிடுவர். சைவசித்தாந்த நூல்கள் இன்னொருவாறு மெய்கண்ட சாஸ்திரங்கள் என்னும் பெயராலும் பெரிதும் அழைக்கப்படுகிறது. அத்துடன் வெவ்வேறான பாடத்துறைகள் ஒரு தலைப்பின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டுள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது். ஒரு நூல் இரண்டு தொகுப்பில் இடம்பெறுகின்றது. இவ்வாறான பண்புகளுடன் காணப்படுகின்ற தொகை நூல்களை நூலகத்தில் ஒழுங்கமைக்கும் போது பல சவால்கள் எதிர்கொள்ளப்படுகின்றன. தகவல் ஒழுங்கமைப்பின் போது தெளிவான நுட்பங்கள் பின்பற்றப்பட வேண்டி உள்ளன.

## 7. ஆய்வுப் பிரச்சினை

தமிழ் மரபிலெழுந்த தொகை நூல்களை ஒழுங்கமைத்தல் தொடர்பில் ஆங்கில அமெரிக்கப் பட்டியலாக்க விதிமுறையில் நுணுக்கமான அறிவுறுத்தல்கள் இல்லை. ஆனால் தமிழ்ப் பிரதேசத்தின் நூலகங்கள் தொகைநிலைத் தன்மையுடைய இத்தகைய நூல்களை அதிகளவில் சேகரித்துக் கொள்ள வேண்டியனவாக உள்ளன. ஏனெனின் தமிழ்மரபு சார்ந்தும் பிரதேசம் சார்ந்தும் இத்தகைய பழம்பெரும் நூல்கள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. எனினும் அவற்றிற்கேயுரிய தனித்தன்மை

காரணமாக இத் தொகைநூல்கள் நூலகத் தகவல் ஒழுங்கமைப்பில் தனித்துவமான சில சவால்களை எதிர்கொள்ள வைக்கின்றன. ஏற்கனவே வழங்கிவரும் மரபுவழியான தலைப்புகளை உள்ளபடியே சீரமைவுத் தலைப்புகளாகப் பயன்படுத்துவது சவால்கள் நிறைந்ததாக உள்ளது.

## 8. தரவுப் பகுப்பாய்வும் திறனாய்வும்

நூல்விபரத் தரவுகளைப் பட்டியலாக்கம் செய்யப் பயன்படும் நியமமாக ஆங்கில அமெரிக்கபட்டியலாக்க விதிமுறை உள்ளது. நூலகப் பட்டியலாக்கச் செயற்பாட்டின் போது நூலகங்கள் பின்பற்றக் கூடிய சீரமைவுத் தலைப்புப் பற்றிய விதிமுறைகள் இந்த நியமத்தின் இருபத்து ஐந்தாவது இயலில் குறிப்பிடப்படுகின்றன. (யுயுஊசு 2. 25. 18) மேலைத்தேய மரபிலமைந்த ஆக்கங்களை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட விதிமுறைகளை இவ் இயல் குறிப்பிடுகின்றது. இந்த அடிப்படைகளை விதிகளை உள்வாங்கிய நிலையில் தரவுப் பகுப்பாய்வு இடம்பெறுகின்றது.

### 8.1 தமிழ் மரபில் சீரமைவுத் தலைப்புக்கள்

இன்று தமிழில் காணக்கிடைக்கும் பழம் பாடல்கள் பன்னெடுங் காலங்களுக்கு முன்னர் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட தொகுப்பு முயற்சிகளால் இன்றைய சமூகத்திற்குக் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த நூற்தொகுதிகளை அதேமரபு மாறாமல் அவ்வத் தொகுதிப் பெயர்களுடன் வைத்துப் பயன்படுத்தும் தன்மையே பெரிதும் காணப்படுகின்றது. எண்ணிக்கையில் அதிகமாக உள்ள இவ்வெளியீடுகள் பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படுவதனையும் அவதானிக்க முடிகின்றது. எனவே இவற்றை ஒரு தலைப்பின் கீழ் கொண்டு வந்து ஒழுங்கமைக்க வேண்டிய இன்றியமையாத தேவையும் காணப்படுகின்றது.

சங்ககாலப் பாடல்கள் பலவும் மறைந்து விட்டன எனவும், எஞ்சியவற்றை பிற்காலத்தோர் ஒன்று திரட்டி வகைப்படுத்தியுள்ளனர் எனவும் அறியமுடிகின்றது. (சீனிவாசன், 1964) பத்துப்பாட்டென்றும் எட்டுத்தொகையென்றும் வழங்கி வருகின்ற இவ்விரண்டையும் ஒன்றாகச்

சேர்த்துப் பதினெண் மேற்கணக்கு என இன்னொரு பெயராலும் குறிப்பிடுகின்றனர்.

பத்துப்பாட்டென்பது பத்துத் தனித்தனி நீண்ட பாடல்களின் தொகுப்பாகும். பத்துத் தனித்தனியான நூல்களை பத்துப்பாட்டு என்ற ஒரு பொதுவான தலைப்பில் குறிப்பிடும் முறையாக இது உள்ளது. இங்கு பத்துப்பாட்டு என்றவாறு பயன்படும் சொல்லை நன்னூலுக்கு உரையெழுதிய மயிலைநாதர் பயன்படுத்தியுள்ளார். (இராசமாணிக்கனார், 1963). பத்துப்பாட்டு நூல்கள் பதினெண் மேற்கணக்கு நூல்களுள் வைத்தெண்ணப்படுகின்ற போதும் பதினெண் மேற்கணக்கு என்ற தலைப்பினைச் சீரமைவுத் தலைப்பாகக் கொள்ளாமல், அவற்றைப் பத்துப்பாட்டு என்ற தலைப்பின் கீழ் ஒழுங்கமைப்பது பொருத்தமானது. ஏனெனில் பதினெண் மேற்கணக்கு என்ற தலைப்பின் கீழ் இந்தப் பதினெட்டு நூல்களையும் ஒழுங்கமைக்கும் போது ஒரு பரந்த அல்லது விரிந்த தன்மை ஒழுங்கமைப்பில் ஏற்படும். ஆனால் பத்துப்பாட்டு என்பதன் கீழ் ஒழுங்கமைக்கும் போது ஒரு ஒடுங்கிய நுணுக்கமான ஒழுங்கமைப்பு இந்த நூல்கள் சார்ந்து ஏற்பட வாய்ப்புள்ளது.

**8.2 திருமுருகாற்றுப்படையின் இட அமைவு**

திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டினுள் முதல் பாட்டாக உள்ளது. தமிழ் இலக்கியத் தொகுப்பு முயற்சிகளின் போது திருமுருகாற்றுப்படைக்கு இரண்டு தொகுப்புக்களில் இடமளிக்கப்பட்டுள்ளது. பத்துப்பாட்டில் முதல் பாட்டாகத் தொகுக்கப்பட்டுள்ள திருமுருகாற்றுப்படையை பின்னர் மீண்டும் பதினொராம் திருமுறையினுள்ளும் தொகுத்துள்ளனர். இந்நிலையில் திருமுருகாற்றுப்படையைப் பத்துப்பாட்டு என்ற சீரமைவுத் தலையங்கத்தின் கீழ் ஒழுங்கமைப்பதா? அல்லது பதினொராம் திருமுறையினுள் ஒழுங்கமைப்பதா? என்பது வினாவுக்குரியதாக உள்ளது.

**8.3 எட்டுத்தொகை**

எட்டுத்தொகை என்பது ஒரு சீரமைவுத் தலைப்பாக பயன்படுத்தப்படுகிறது. எட்டுத்தொகையுள் ஒன்றாகப் பரிபாடல் உள்ளது. இந்நூல் குறிப்பிடும்

பொருள் திருமால் முருகன் முதலிய இந்து சமயக் கடவுளரைப் பற்றியது. அதே வேளை இது ஒரு சிறந்த இசை நூலாகவும் பயன்படுகின்றது. ஆனால் எட்டுத்தொகை என்ற சீரமைவுத் தலைப்பின் கீழ் ஒழுங்கமைக்கும் போது தமிழ் கவிதை நூலாகவே இது கொள்ளப்படுகின்றது (விசாகரூபன்இ 2016.)

**8.4 பதினெண் கீழ்க்கணக்கு**

பதினெட்டுத் தனித்தனி நூல்களின் தொகுப்பாகப் பதினெண் கீழ்க்கணக்கு என்னும் நூற்தொகுப்புக் காணப்படுகின்றது. இந்தத் தொகுப்பிலுள்ள நூல்களின் காலம் பற்றிய முடிந்த முடிபான செய்திகள் இல்லை. இவற்றுள் எவை முன்னர் தோன்றியவை எவை பின்னர் தோன்றியவை என்பதற்கான ஆதாரங்களும் இதுவரை காணப்படவில்லை. (சிதம்பரனார், 1957) நாலடியார் தொடக்கம் கைந்நிலை என்ற நூலீறாகவுள்ள பதினெட்டு நூல்களின் தொகுப்பைக் கீழ்க்கணக்கு என்ற தொகுதித் தலைப்பின் கீழ் பன்னிருபாட்டியல் குறிப்பிடுகின்றது. (பாலசுப்பிரமணியன், 1964).

பதினெண் கீழ்க்கணக்கு என்ற தொகுப்பின் கீழுள்ள நூல்கள் அனைத்தையும் பதினெண் கீழ்க்கணக்கு என்ற சீரமைவுத் தலைப்பைப் பயன்படுத்தி ஒழுங்கமைக்க விரும்பின் அந்த நூலகத்தில் சில இடர்பாடுகள் எதிர்கொள்ளப்படலாம். இந் நூல்கள் அனைத்தும் ஒரு சீரமைவுத் தலைப்பின் கீழ் ஒன்றாக ஒழுங்கமைக்க முடியாதவாறு வெவ்வேறு பாடத்துறைக்குரியனவாக உள்ளன. நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவைநாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி முதலான பத்து நூல்களும் முழுமையாக ஒழுக்கவியல் (னுனுஊ குறியீடு 170) என்ற பாடத்துறையினுள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய நூல்களாக உள்ளன. எனவே மொத்தம் பதினெட்டு நூல்களில் பதினொரு நூல்கள் வேறு துறைக்குரியனவாக உள்ளநிலையில் இவற்றைப் பதினெண் கீழ்க்கணக்கு அல்லது கீழ்க்கணக்கு நூல்கள் என்ற சீரமைவுத் தலைப்பின் கீழ் ஒழுங்கமைப்பது தவிர்க்கப்படலாம்.

### 8.5 பதினெண் கீழ்க்கணக்கில் திருக்குறள்

உயர்ந்த அறங்களையெல்லாம் ஒன்றுதிரட்டி உரைக்கும் நூல் திருக்குறள். உலகப் பொதுமறையாக இது கருதப்படுகின்றது. இது பகுதியாவும், முழுமையாகவும் பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (இறையனார்இ 1949.) திருக்குறளுக்கு அதிகமான உரைகள் எழுதப்பட்டுள்ளன. பலர் இந்நூல் தொடர்பாக ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளனர். இந்நூல் பல பதிப்புக்களாகவும் வெளிவந்துள்ளது. திருக்குறள் மற்றும் அது தொடர்பான அத்தனை வெளியீடுகளையும் ஓரிடப்படுத்தி ஒழுங்கமைத்து வைப்பது வாசகர் பயன்பாட்டிற்கு இலகுவானது. எனவே திருக்குறளைப் பதினெண் கீழ்க்கணக்கு என்ற சீரமைவுத் தலைப்பின் கீழ் அல்லாமல் திருக்குறள் என்பதனைத் தனியான சீரமைவுத் தலைப்பாகப் பயன்படுத்துவது பொருத்தமானது.

### 8.6 சமயநூல்களின் தொகுப்பு

தமிழ் இலக்கிய வரலாற்றின் ஒன்பதாம் நூற்றாண்டுக் காலப்பகுதி சமயத்தை மையப்படுத்திய இலக்கிய ஆக்கமுயற்சிகள் இடம்பெற்ற காலப்பகுதி ஆகும். காதலும் போரும் பழையகால இலக்கியங்களின் பாடுபொருளாக இருந்ததைப்போல இடைக்காலத்தில் சமயம், தத்துவம் என்பன இலக்கியங்களின் பாடுபொருளாக அமைந்துள்ளன.

திருமுறை மற்றும் நாலாயிரதிவ்வியபிரபந்தத் தொகுப்புப் பணிகள் எந்தளவிற்குச் சமயமுக்கியத்துவம் வாய்ந்த பணிகளாக அமைந்தனவோ அந்தளவுக்கு தமிழ் இலக்கியங்களைக் கோவைப்படுத்திப் பாதுகாக்கும் காத்திரமான ஆவணப்படுத்தல் முயற்சியாகவும் அமையலாயின. இந்நூல்கள் கவிதைப் பண்புடைய தமிழ் இலக்கிய நூல்கள் ஆகும். பக்தி இலக்கியங்கள், தெய்வீக இலக்கியங்கள் என்றவாறாகக் குறிப்பிடப்படுகின்ற இந்த நூல்கள் தமிழைச் சிறப்புப் பாடநெறியாக வழங்கி வரும் நூலகங்களிலே இலக்கியம் என்ற துறைக்குள்ளேயே (னுனுஊ குறியீடு 894.8111) ஒழுங்கமைக்கப்படுகின்றன. திருமுறைகளும் பாசுரங்களும் சமய நூல்கள் என்பதற்கும் மேலாகப் பல்லவர் காலத்தில் எழுந்ததமிழ் இலக்கியங்களாகவே கொள்ளப்படுகின்றன.

திருமுறைகள் மற்றும் திவ்வியபிரபந்தங்கள் இரண்டிலும் எது முதலில் தொகுக்கப்பட்டது என்பதற்குச் சான்றுகள் இல்லையெனினும் முதல் ஏழு திருமுறைகள் முதலில் தொகுக்கப் பெற்றிருக்கலாம் எனவும் அதன் பின்னர் ஏனையவை தொகுக்கப் பெற்றிருக்க வேண்டுமென்ற ஊகமும் இத்துறை சார்ந்து காணப்படுகின்றது. (சுப்பிரமணிய அய்யர், 1959)

### 8.6.1 திருமுறைகள்

திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார்நம்பி ஆவார். திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகங்கள் தொடக்கம் சேக்கிழாரின் பெரியபுராணம் வரையுள்ள பாடல்கள் பலவும் திருமுறைகள் என்ற சொற்றொடரின் கீழ் பன்னிரண்டு பகுதிகளாக தொகுக்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியப் பரப்பில் ஆறாம் நூற்றாண்டின் பின்னர் உருவாகிய தமிழ்க் கவிதை நூல்கள் திருமுறை என்னும் தொகையாகத் தொகுக்கப்பட்டன. (சிவத்தம்பி, 2007). இந்த நூல்கள் சைவசமய வழிபாட்டு நூல்களாகவும் அதேவேளை தமிழ் இலக்கிய வரலாற்றின் ஒரு காலகட்ட இலக்கியங்களாகவும் உள்ளன.

திருமுறைத் தொகுப்பினுள் இருபத்தியேழு (27) சிவனடியார்களின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவர்களுள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திசுவாமிகள் ஆகியோரால் பாடப்பட்ட தேவாரப் பதிகங்கள் யாவும் முதல் ஏழு திருமுறைகளுக்குள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. திருஞானசம்பந்தர் பதிகங்கள் – 384,திருநாவுக்கரசர் பதிகங்கள் – 383,சுந்தரமூர்த்திநாயனார் பாடியவை– 100. இவையாவும் முதல் ஏழு திருமுறைக்குள் அடங்குகின்றன. (துரைச்சாமிப்பிள்ளை, 1958). இந்த மூன்று நாயன்மார்களும் பாடிய பாடல்கள் யாவும் இன்று தேவாரம் என்ற பொதுப் பெயரால் சுட்டப்படுகின்றன. இந்தத் தேவாரங்கள் அடங்கிய தொகுதியே முதல் ஏழு திருமுறைகளாகும் (இரகுபரன், 2012). ஏழு திருமுறைகளையும் அடங்கன் முறை எனவும் அழைப்பர். முதல் ஏழு திருமுறைகளும் நூலகமொன்றில் ஒழுங்கமைக்கப்படும் போது ஒவ்வொன்றையும் துல்லியமான முறையில்

வாசகருக்கு இனங்காட்டுவதாயின் திருமுறை என்ற சீரமைவுத் தலைப்பின் கீழ் பின்வருமாறு ஒழுங்கமைத்துக் கொள்ளலாம்.

முதல் மூன்று திருமுறைகளும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் பாடப்பட்ட தேவாரப் பாடல்களின் தொகுப்பாகும். இவர் இறைவனின் ஞானப்பாலை உண்டமையால் ஞனசம்பந்தர் எனப் பெயர் பெற்றார் எனப் புராணங்கள் கூறுகின்றன. திருஎன்னும் அடைமொழிச் சொல் தெய்வத்தன்மை பொருந்தியவர் என்ற மதிப்பை வழங்கும் பொருட்டுப் பயன்படுகின்றது. இப்பெயருடன் பயன்படும் 'திரு' என்ற அடைமொழியை நீக்கிச் சம்பந்தர் என்றவாறு பயன்படுத்தி ஒழுங்கமைப்பது பொருத்தமானது.

அடுத்த மூன்று திருமுறைகளும் திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடப்பட்டவை. மருள்நீக்கியார் என்ற இயற்பெயரையுடைய இவருக்குத் திருநாவுக்கரசர் என்னும் பெயர் இறைவனால் வழங்கப்பட்டதாகப் பெரியபுராணம் கூறுகின்றது. (வேலுப்பிள்ளை, 2010). இவர் அப்பர் என்னும் பெயரால் பிரபல்யமானவர் என்பதால் 'அப்பர்' என்ற பெயரை சீரமைவுத் சீரமைவுத் தலைப்பாகப் பயன்படுத்தமுடியும். இவ்வாறே ஏழாந் திருமுறையாகவுள்ள சுந்தரமூர்த்திநாயனாரின் தேவாரத் தொகுப்பினைச் 'சுந்தரர்' என்ற சீரமைவுத் தலைப்பின் கீழ் ஒழுங்கமைத்துக் கொள்ளமுடியும்.

இவ்வாறாக முதல் ஏழு திருமுறைகளையும் மூன்று நாயன்மார்களினது சுருக்கமானதும், பிரபல்யமானதுமான பெயர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்ற பெயர்களின் கீழ் ஒழுங்கமைப்பதன் மூலம் முதல் ஏழு திருமுறைகளையும் நுட்பமாக ஒழுங்கமைத்துக் கொள்ளமுடியும். இப்பாடல்களிடையே கால வேறுபாடு உள்ளதே தவிரப் பொருள் வேறுபாடு இல்லையென்பதால் தேவார முதலிகளின் பெயரையும் சீரமைவுத் தலைப்பாகப் பயன்படுத்துவது பொருத்தமானது.

### 8.6.2 வைணவப் பிரபந்தங்களின் தொகுப்பு

சைவமரபில் திருமுறைகள் தொகுக்கப்பட்டமை போல வைணவ மரபிலும் ஆழ்வார்களால் இயற்றப்பட்ட பிரபந்தங்கள் தொகுக்கப்பட்டன. நாலாயிரம் எண்ணிக்கையுடைய பாடல்களின் தொகுப்பு என்ற நாலாயிரதிவ்வியபிரபந்தம் என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்படுகின்றது. நாதமுனி எனப் பொதுவாக அழைக்கப்படுகின்ற அரங்கநாதமுனி என்பவர் நால்வகை வேதங்களின் பகுப்புமுறையை அடிப்படையாகக் கொண்டு நான்கு பகுதிகளாகத் தொகுத்தார் என அறியமுடிகின்றது. (சிவத்தம்பி, 2007). முதலாயிரம், இரண்டாமாயிரம், மூன்றாமாயிரம், நான்காமாயிரம் என இப்பகுதிகள் சுட்டப்படுகின்றன. இப்பாடல் தொகுப்புக்கள் நாலாயிரதிவ்வியபிரபந்தம் என்ற சீரமைவுத் தலைப்பின ˙கீழ் ஒழுங்கமைத்துக் கொள்வது பொருத்தமானது.

### 8.6.3 பதிகங்களும் பாசுரங்களும்

சைவநாயன்மாரால் பாடப்பெற்ற பாடல்களைத் திருப்பாட்டு, தேவாரம், பதிகம், தமிழ்மாலை, தமிழ்பத்து, திருப்பதிகம் எனப் பலபெயர்களால் குறிப்பிடுவர். இவ்வாறே வைணவ மரபிலமைந்த ஆழ்வார் பாடல்களை திருப்பாசுரம் என்று குறிப்பிடுவர். எவ்வாறாயினும் இவை நூலகத் தகவல் ஒழுங்கமைப்பில் தமிழ்க் கவிதை நூல்களாகவே கருதப்படத்தக்கன. (இரகுபரன், 2012). இவற்றிற்கு வழங்கப்படக்கூடிய பகுப்பு எண் ஒரே வகையானது. (<u>னுஊஊ</u> குறியீடு 894.8111) இவ்வாறு சைவத் திருப்பதிகங்களையும் வைணவ ஆழ்வார் பாசுரங்களைும் நூலகத்தில் ஒழுங்கமைக்கும் போது பின்வருவன போன்ற விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டியது அவசியமானது.

i. திருமுறைத் தொகுப்பில் இடம்பெறுகின்ற திருப்பாவை திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களைப் போல திவ்வியபாசுரங்களின் தொகுப்பிலும், அதே தலைப்பிலமைந்த வேறுபாடல் தொகுதிகள் உள்ளன.

ii. மாணிக்கவாசகருகம் திருமங்கையாழ்வாரும் ‘திருச்சாழல்’ பாடல்களை இயற்றியுள்ளனர்.

iii. சேந்தனார் இயற்றிய திருப்பல்லாண்டு என்னும் நூல் திருமுறைவைப்பினுள் காணப்படுகின்றது. அவ்வாறே

பெரியாழ்வாரும் திருப்பல்லாண்டு பாடியுள்ளார். திருவந்தாதியும் இரண்டு தொகுப்புக்களிலும் இடம்பெறுகின்றன.

மேலே சுட்டிக்காட்டியது போல ஒத்ததலைப்பில் வெவ்வேறு ஆசிரியர்களால் பாடப்பட்ட கவிதைகள் இரண்டு தொகுப்புக்களிலும் காணப்படுகின்றன. இவற்றைச் சரியாகக் கவனத்தில் கொண்டு நூல்களை ஒழுங்கமைப்பது அவசியமானது.

**8.7 சைவசித்தாந்த நூல்கள்**

தமிழ் நூல் வெளியீடுகளை ஒரு சொற்தொடரின் கீழ் ஒரே தொகுதியாக வைத்து எண்ணுகின்ற மரபின் இன்னொரு நூற்றொகுதி சைவசித்தாந்த நூல்கள் ஆகும். சைவசமயத்தின் தத்துவக் கோட்பாடுகளை முறைப்படுத்தி உணர்த்தும் நூல்களாக இவை உள்ளன. கி. பி. 12 – 14 நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய பதினான்கு நூல்கள் சைவசித்தாந்த நூல்களாகக் கொள்ளப்படுகின்றன. இந்த நூல்கள் பதினான்கையும் சேர்த்துப் பொதுவானதொரு சொற்றொடரின் கீழ் குறிப்பிடுவர். இவ்வாறு இதற்காகப் பலசொற்கள் பயன்படுகின்றன. மெய்கண்டசாத்திரம், சித்தாந்தசாத்திரம், சைவசித்தாந்த சாத்திரம், சித்தாந்தம் எனப் பலசொற்கள் உள்ளன.

சைவசித்தாந்தம் என்னும் சொல் முதன்முதலில் திருமந்திரத்தில் பயன்படுத்தப்பட்டதாக அறியமுடிகின்றது. (இராமநாதன், 1992). காஞ்சிநாகலிங்க முனிவர் என்பவர் இந்நூல்கள் முழுவதையும் 1897 இல் பதிப்பித்து அவற்றை மெய்கண்டசாத்திரங்கள் என்று குறிப்பிட்டுள்ளார். (வேதநாதன், 2008).

சைவசித்தாந்த நூல்கள் பதினொன்றையும் முதன் முதலில் மதுரைநாயகம்பிள்ளை என்பவர் 1886 இல் அச்சிட்டார். அந்த நூலின் முன்னுரையில் சிந்தாந்த நூல்கள் பதினான்கையும் ஒரு வெண்பாவில் தொகுத்துக் கூறியுள்ளார். இந்த வெண்பாவில் சைவசித்தாந்தத்தில் பதினான்கு நூல்களின் தலைப்புக்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நூற்றொகுதி தொடர்பில் பலவகைச் சொற்கள் தலைப்பாகப்

பயன்பட்டாலும் கூட அதிகமாகப் பயன்படும் சுருக்கமான தலைப்பாக உள்ள 'சைவசித்தாந்தம்' என்னும் தொடரைச் சீரமைவுத் தலைப்பாகப் பயன்படுத்தி அதன் கீழ் இந்த நூல்களை ஒழுங்கமைப்பது பொருத்தமானது.

**8.7.1 திருஉந்தியாரும் திருக்களிற்றுப்படியாளும்**

சைவசித்தாந்த நூல்வரிசையில் திருஉந்தியார் முதலில் குறிப்பிடப்படுகின்றது. இதனை அருளியவர் திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார். இதன் இரண்டாவது நூல் திருக்களிற்றுப்படியார். இதனை அருளியவர் திருவியலூர் உய்யவந்ததேவநாயனார். இவர்கள் இருவரும் குரு பரம்பரைவழியாக ஒரே பெயரைப் பெற்றுள்ளனர். (''வாழ்வியல் களஞ்சியம்''இ 1992). எனினும் அவர்கள் இருவரும் வாழ்ந்த ஊரின் பெயர் வேறுவேறானது.

இவ்விரண்டு நூல்களுமே தத்துவம் என்ற ஒரே பாடத்துறைக்குரியவை. (<u>னுனுஊ</u> குறியீடு 181.491) இந்த நூல்களின் ஒழுங்கமைப்பை இரண்டு வகையாக மேற்கொள்ளலாம்.

I. நூற் தலைப்பில் நூலகம் அகர வரிசை ஒழுங்கை மேற்கொள்வதாயின் தலைப்பின் அடைமொழியாகவுள்ள திரு என்பதை நீக்கி உந்தியார்இ களிற்றுப்படியார் என ஒழுங்கமைக்கலாம்.

II. ஆசிரியர் பெயரில் ஒழுங்கமைப்பதாயின் இரண்டு ஆசிரியர் பெயரும் ஒரே பெயராகக் காணப்படுவதால் ஊரின் பெயரை பட்டியல் பதிவின் தலையங்கத்துடன் பின்னால் இணைத்து வேறுபடுத்திக் கொள்ளலாம். இடத்தின் பெயரால் வேறுபடுத்தக் கூடிய வழிமுறையை ஆங்கில அமெரிக்க பட்டியலாக்க விதிமுறை வழங்கியுள்ளது. (யுயுஊசு.25.5உ)

### 8.7.2 உமாபதி சிவாச்சாரியார்

பதினான்கு சைவசித்தாந்த நூல்களுள் எட்டு நூல்கள் உமாபதிசிவாச்சாரியாருடையவை. வினாவெண்பா, போற்றிப்ப∴றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம் என்பனவாகும். இந்த நூல்களை சைவசித்தாந்தம் என்ற சீரமைவுத் தலைப்பைப் பயன்படுத்தி அதனடிப்படையில் உமாபதிசிவாச்சாரியாரின் பெயரின் கீழ் பதிவு செய்யப்படவேண்டும். தவிர இவரது ஏனைய நூல்களான சிதம்பரமான்மியம், திருத்தொண்டர் புராணசாரம், பௌஷ்கர ஆகமவிளக்கம் முதலிய நூல்கள் அந்தந்தப் பொருட்துறைக்குள் ஒழுங்கமைக்கப்படவேண்டும். இவை சீரமைவுத் தலைப்பின் கீழ் இடம்பெறத் தேவையில்லை. ஏனெனில் சைவசித்தாந்தம் என்றதொகுப்புக்குள் இந்த நூல்கள் இடம்பெறவில்லை.

## 9. ஆய்வு முடிவுகளும் பரிந்துரைகளும்

பழமையான இலக்கியங்கள் தொடர்பில் பல தொகுப்பு முயற்சிகள் இடம்பெற்றிருக்கின்றன. அந்தந்தத் தொகுப்புக்கள் ஒவ்வொன்றும் தமிழ் நூல்கள் பலவற்றையும் ஒன்றுதிரட்டியுள்ளன. இவ்வாறு ஒன்று திரட்டப்பட்ட பின்னர் இவை எல்லாவற்றையும் ஒரே சொற்றொடரின் கீழ் குறிப்பிட்டுள்ளன. பெரும்பாலான தொகுதித் தலைப்புகள் அவற்றுள் அடங்கியுள்ள நூல்களின் எண்ணிக்கையையும் குறிப்பிடுகின்றமையும் அவதானிக்கலாம். எட்டுத்தொகை நூல்கள்- எட்டு,பத்துப்பாட்டு நூல்கள்- பத்து,பன்னிருதிருமுறைகள்- பன்னிரண்டு இவ்வாறே திவ்யபிரபந்தங்கள்- நாலாயிரம் என்றவாறு இவை காணப்படுகின்றன.

மரபுவழிப்பட்ட தலைப்புக்களாக உள்ள இத்தகைய சொற்றொடர்களை உள்ளது உள்ளவாறே சீரமைவுத் தலைப்புக்களாகப் பயன்படுத்துகின்ற தன்மையே பட்டியலாக்கத்தின் போது பெரும்பாலும் காணப்படுகின்றது. இவ்வாறு பயன்படுத்துதல் சில இடங்களில் பொருத்தமற்றுள்ளமையை இவ் ஆய்வில் இனங்காண முடிகின்றது.

I. திருமுருகாற்றுப்படை சார்ந்து பல்வேறு சர்ச்சைகள் காணப்படுகின்றன. எனினும் முடிவாக அதன் மொழிநடை

சங்ககாலச் செய்யுள்களின் அமைப்பினைக் கொண்டதென்பது இத்துறைசார்ந்த ஆய்வாளர்களிடமிருந்து பெறப்படுவதனால் திருமுருகாற்றுப்படையை பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகக் கருதி அதன் கீழ் ஒழுங்கமைப்பது பொருத்தமானது. துவிர குறித்த ஒரு நூலகம் ‘‘பத்துப்பாட்டு’’ என்ற சீரமைவுத் தலையங்கத்தைப் பயன்படுத்தித் தமிழ் இலக்கியங்களை ஒழுங்கமைக்காதவிடத்து அதன் பொருளை அடிப்படையாகக் கொண்டு இந்துசமயம் என்ற (னுனுஊ குறியீடு 294.5) என்ற விடயப்பரப்புடன் ஒழுங்கமைப்பது தவறானது அல்ல. ஏனெனில் திருமுருகாற்றுப்படை முருகவழிபாடு பற்றிக் குறிப்பிடுகின்ற ஒரு நூலாகும்.

II. திருமுருகாற்றுப்படையைப் போலவே எட்டுத்தொகை நூல்களுள் காணப்படும் பரிபாடலும் சங்கத்தமிழ் நூல்களின் ஒழுங்கமைப்பிலே எட்டுத் தொகை என்ற சீரமைவுத் தலைப்பைப் பயன்படுத்தாதவிடத்துப் பொருத்தமான விடயப்பரப்பினுள் ஒழுங்கமைக்குப்படலாம். நூலகத்தின் தேவையைப் பொறுத்து இசை சார்ந்தோ, சமயம் சார்ந்தோ இது ஒழுங்கமைக்கப்படலாம். அல்லது பொருத்தமான விடயத் தலையங்கத்தை வழங்கி வாசகர் தேடலுக்கு உதவலாம்.

III. பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் அதிகமானவை வெவ்வேறு பாடத்துறைக்குரியனவாக உள்ளன. இந்நிலையில் சீரமைவுத் தலைப்பாக பதினெண் கீழ்க்கணக்கு என்ற சீரமைவுத் தலைப்பின் அடிப்படையில் நின்று கொண்டு தமிழ் இலக்கியம் – கவிதை – சங்க மருவியகாலம் (னுனுஊ குறியீடு 894.81111) என்ற பாடத்துறைக்குள் ஒழுங்கமைப்பதா? அல்லது தெளிவான ஒரு பகுப்புமுறையைப் பின்பற்றி உரியதுறைக்குள் கொண்டுசெல்வதா? என்பதை நூலகம் தீர்மானித்தல் வேண்டும். பதினெண் கீழ்கணக்கு என்ற சொற்றொடரை குறித்த நூலகம் சீரமைவுத் தலைப்பாக் கொள்ளுமேயானால் நூல்களை அந்தந்தப் பாடத் துறைக்குள் கொண்டு செல்ல முடியாது. அதனை சீரமைவுத் தலைப்பாகக் கொள்ளாதவிடத்து உரிய பாடத்துறைக்குள் ஒழுங்கமைக்கலாம்.

எனவே இது தொடர்பில் நூலகத்தின் தன்மைஇ வாசகர்களின் தேவை, பதினெண் கீழ்க்கணக்கு தொடர்பில் நூலகத்தில் காணப்படக் கூடிய நூல்களின் எண்ணிக்கை போன்ற அம்சங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமானது.

IV. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுளொன்றாகிய திருக்குறளைச் சார்ந்து பல மொழிபெயர்ப்புகள், பதிப்புகள், உரைகள், திறனாய்வுகள் என நூலகங்களிலே அதிக வெளியீடுகள் இடம் பெறவாய்ப்புள்ளது. இந்நிலையில் திருக்குறளைத் தனியான ஒரு சீரமைவுத் தலைப்பின் கீழ் ஒழுங்கமைப்பதே பொருத்தமானது.

இங்கு திருக்குறள் என்பதில் ‘‘திரு’’ என்பதனை நீக்கி ‘‘குறள்’’ என்ற சொல்லை சீரமைப்புத் தலைப்பாகக் கொள்வதுநன்று. ஏனெனில் பின்னால் ‘‘திருமுறை’’ என்ற சீரமைவுத் தலைப்பில் வரும் ‘‘திரு’’ என்பதை நீக்கின் ஒரு பொருத்தமற்ற அதேவேளை குழப்பமான அல்லது கருத்தற்ற சீரமைவுத் தலைப்பைப் பயன்படுத்தவேண்டிய சூழ்நிலை உருவாகும். எனவே ஒரு நூலகம் ‘‘திருமுறை’’ என்ற சீரமைவுத் தலைப்பைப் பயன்படுத்துவதாயின் அந்நூலகம் திருக்குறளுக்கு ‘குறள்’ என்னும் சீரமைப்புத் தலைப்பினைப் பயன்படுத்துவதே பொருத்தமானது.

V. தேவாரப் பதிகங்களும், திவ்யபாசுரங்களும் சமயம் என்ற பொருட்துறைக்குரியன வென்று விவாதிப்பாருளர். இதனால் இந்நூல்களை இந்துசமயம் என்ற பாடப்பிரிவினுள் ஒழுங்கமைப்பதே சரியானதெனவும் சிந்திக்கப்படுகின்றது. அவ்வாறானதொரு தீர்மானம் நூலகத்தில் நிறைவேற்றப்படுமானால் தமிழ் இலக்கியவரலாற்றின் ஒரு காலகட்டம் வெற்றிடமாக்கப்பட்டுவிடும். ஏனெனில் இடைக்காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்கள் பெரும்பாலும் அந்தந்தச் சமயங்களின் கடவுளர்களையே பாடுபொருளாகக் கொண்டு இயற்றப்பட்டன. திருமுறை மற்றும் திவ்வியபாசுரம் முதலான நூல்கள் இலக்கியங்களாக மாத்திரமன்றிச் சிறந்த இசை நூலாகவும் இருக்கின்றன. தமிழ்

இலக்கியத்திலுள்ள மிகச் சிறந்த இசைப்பாக்களைக் கணக்கிட்டால் அவற்றில் மூன்றிலொரு பங்கு திவ்வியபிரபந்தங்களிலும் மற்றொரு பங்கு திருமுறைகளிலும் காணப்படுகின்றன. என்ற ஏ.வி.சுப்பிரமணிய அய்யரின் கூற்று இங்கு மனங்கொள்ளத்தக்கது. (சுப்பிரமணிய அய்யர், 1959) எனவே திருமுறைகளிலும் திவ்வியபாசுரங்களிலும் அந்தந்தத் தலைப்புகளுடன் தமிழ் இலக்கியம் – கவிதை – பல்லவர்காலம் என்ற பாடத்துறையுள் ஒழுங்கமைக்கப்படலாம்.

VI. திருமுறைத் தொகுப்பினை நூலகங்களில் ஒழுங்குபடுத்தும் போது முதல் ஏழு திருமுறைகளையும் சம்பந்தர், அப்பர், சுந்தர் என்ற சீரமைவுத் தலைப்பின் கீழ் நுணுக்கமாக வேறுபடுத்த முடியும். தவிர ஏனைய திருமுறைகளை அந்தந்த ஆசிரியர் பெயரைப் பட்டியல் பதிவின் தலையங்கமாகத் தெரிவுசெய்து சாதாரண ஒழுங்கமைப்பைப் பேணலாம். ஒன்பதாம் திருமுறையும் பல ஆசிரியர்களின் தொகுப்புக்களாக உள்ளபோதும் அந்தந்த ஆசிரியர் பெயர்கள் குறிப்பிடப்படுவதால் அவற்றின் ஒழுங்கமைப்புப் பெரிதும் குழப்பமடையவாய்ப்பு இல்லை. இங்கு முதல் ஏழு திருமுறைகளுமே சீரமைவுத் தலைப்பின் கீழ் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவைகளாக உள்ளன.

VII. திருமுறைப்பாடல்களும், திவ்வியபிரபந்தங்களும் ஒரே காலத்தனவாகவும் அதிக வெளியீடுகளையும் கொண்டுள்ளமையினால் இவற்றிற்குரிய நுட்பமான ஒழுங்கமைப்பைப் பேணவேண்டிய அவசியம் உள்ளது. இவற்றிற்கான னுனுஊ குறியீடு எண் 894.81112 என்பதாகும். எனவே அதிகளவு தொகையான நூல்களை குழப்பமற்றவகையில் ஒரே காலப்பகுதி சார்ந்த பாடத்துறைக்குள் ஒழுங்கமைக்கும் போதுபட்டியல் பதிவுக்கான தலையங்கமும் சீரமைவுத் தலைப்புகளின் குழப்பமற்ற பிரயோகமும் இவ்விரு பெருந்தொகுப்புக்களை ஒழுங்கமைக்கும் போது தேவைப்படுகின்றன.

VIII. சைவசித்தாந்த நூல்கள் வெவ்வேறு காலப்பகுதிகளில் எழுந்தனவாயினும் இவை பொருள் அடிப்படையில் ஒன்றாக ஒழுங்கமைக்கப்பட வேண்டியவை என்ற அடிப்படையில் பதினெட்டாம் நூற்றாண்டளவில் அச்சிடப்பட்டுள்ளன. திருமுறைகளை நம்பியாண்டார் நம்பி தொகுத்ததைப் போலவோ அல்லது நாதமுனி திவ்வியபிரபந்தத்தை தொகுத்ததைப் போன்றதொரு முயற்சியாகவோ சைவசித்தாந்த நூல்களில் ஒன்றிணைப்புக் கருதப்படமுடியாதது எனினும் சைவசித்தாந்தம் என்ற பொருளினடிப்படையில் ஒரு பொதுவான தலைப்பின் கீழ் பதினான்கு நூல்களும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. எனவே நூலகங்களிலும் இவற்றை ஓரிடப்படுத்தி ஒழுங்கமைப்பதே பொருத்தமானது. ‘‘சைவசித்தாந்தம்’’ என்ற சீரமைவுத் தலைப்பின் கீழ் ஆசிரியர் அகரவரிசைப்படி ஒழுங்கமைத்து கொள்ளுவது பயன்பாட்டிற்கு இலகுவானது. திருஉந்தியார், திருக்களிற்றுப்படியார் ஆகிய இரண்டு நூல்களும் ஒரேமாதிரியான ஆசிரியர் பெயரைக் கொண்டுள்ளமையினால் அந்த ஆசிரியர்களின் ஊரின் பெயரால் அவ்விரண்டு ஆசிரியர்களையும் வேறுபடுத்தலாம்.

## துணைநூற் பட்டியல்

### I. தமிழ் நூல்கள்

1. இரகுபரன், க. (2012). *சம்பந்தர் படைப்பாளுமை.* கொழும்பு: இந்துகலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு.

2. இராசமாணிக்கனார், மா (1963). *தமிழ்மொழி– இலக்கிய வரலாறு: சங்ககாலம்.* சென்னை: பாரிநிலையம்.

3. இராமநாதன், கலைவாணி. (1992). *வேத பாரம்பரியமும் சைவசித்தாந்தமும்.* மதுரை:

ஸ்ரீரங்காபிரிண்டேர்ஸ்.

4. இறையனார் (1949). *திருக்குறள் ஆராய்ச்சி.–திருச்சிராப்பள்ளி*: தமிழகம் வெளியீடு.

5. உய்யவந்த தேவ நாயனார். (1987). ஐஉ *வாழ்வியல் களஞ்சியம்*: (தொகுதி.4இ பப.991-992)
தஞ்சாவூர்:தமிழ்பல்கலைக்கழகம்.

6. சதாசிவபண்டாரத்தார்,வு.ஏ (1957). *பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும்*. சென்னை:
ஸ்டார்பிரசுரம்.

7. சிதம்பரனார்,சாமி. (1957). *பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும்*. சென்னை: ஸ்டார் பிரசுரம்

8. ச
ிவத்தம்பி,கா. (2007). *தமிழில் இலக்கிய வரலாறு*: (*வரலாற்றெழுத்தியல் ஆய்வு*).சென்னை:
நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்.

9. சீனிவாசன், ரா. (1964.) *தமிழ் இலக்கிய வலராற்றுக் கட்டுரைகள்*. சென்னை: பாரி நிலையம்.

10. சுப்பிரமணிய அய்யர், ஏ.வி. (1959). *தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி*. தேனாம்பேட்டை: அமுதநிலையம்.

11. சுப்பிரமணியபிள்ளை, கா. (1949). *இலக்கிய வரலாறு*: இரண்டாம் பாகம். சென்னை: ஆசிரியர்
நூற்பதிப்புக் கழகம்.

12. செல்வநாயகம், வி. (2003). *தமிழ் இலக்கிய வரலாறு*: கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

13. ஞானகுமாரன், நா. (2012). *சைவசித்தாந்தத் தெளிவு*. யாழ்ப்பாணம்: தூண்டி வெளியீட்டகம்.

14. துரைசாமிப்பிள்ளை, சு. ஔவை. (1958). *சைவ இலக்கியவரலாறு (கி.பி. 7 முதல் 10ம் நூற்றாண்டுவரை).* அண்ணாமலைநகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

15. நடராசன், சோ. (1964). *வடமொழி இலக்கிய வரலாறு: செம்மொழிக் காலம்*. கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

16.பாலசுந்தரம், விமலா. (1985இ ஏப்பிரல்) - பட்டியலாக்கத்தில் சீரமைப்புத் தலைப்பின் முக்கியத்துவம்'' ஐெ: *நூலகவியல்: காலாண்டிதழ், தொகுதி 1-7* (செப்டெம்பர் 1985- ஏப்பிரல் 2007).

17. பாலசுப்பிரமணியன், சி. (1964). *தமிழ் இலக்கிய வரலாறு*. சென்னை: பாரிநிலையம்.

18. முத்துக்குமாரன், எம். (2006). *சைவசித்தாந்தம்*. கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

19. விசாகரூபன், மைதிலி. (2016இ) *பழந்தமிழ் இலக்கிய நூல்களை ஒழுங்கமைத்தலில் தூயிதசமப் பகுப்பாக்க விதி முறையின் பிரயோகம்:* ஒரு விளக்க நிலை ஆய்வு. :*சிந்தனை,* தொகுதி ஔஎ. ப.100.

20. வெள்ளைவாரணன், க. (1969). *பன்னிரு திருமுறை வரலாறு:* இரண்டாம் பகுதி. சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

21. வேதநாதன், மா (2008). *சந்தானாசாரியார் சரிதையும் சைவசித்தாந்த சாஸ்திரங்களும்.* யாழ்ப்பாணம்: சைவசித்தாந்த ஆய்வுநிறுவனம்.

22. வேலுப்பிள்ளை, ஆ. (2010). *தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்.* கொழும்பு : குமரன் புத்தக இல்லம்.

23. வையாபுரிப்பிள்ளை, எஸ். (1964). *இலக்கிய மணிமாலை.* திருவல்லிக்கேணி: தமிழ்ப்புத்தகாலயம்.

## II. ஆங்கில நூல்கள்

1. Dewy, Melvil. (2011). *Deway Decimal Classification and relative index.* (23rd ed). Dublin: OCLC.

2. Joint steering committee for revision of AACR. (2012). *Anglo-American cataloguing rules* (2nd ed).